இனிவரும் இனிவரும் காலங்கள் அவை
எங்களின் காலங்கள்
குனிவதும் பணிவதும் இனியில்லை
தமிழ் குடியினிற்கு அழிவில்லை
இருளே இனிமேல் விலகிடு
விடி பொழுதே மடியினில் உலவிடு 2
உலகே எமக்கென குரல்கொடு
எங்கள் உறவுகள் திரும்பிட வழிவிடு 2

உயிரொரு முறைதான் போகும் போகும் உரிமைக்காகப்போகட்டும்
உடல் ஒரு முறைதான் எரியும் எரியும் உரிமைக்காக எரியட்டும்

இனிவரும் இனிவரும் காலங்கள்

சாயும் சுகமே சுகம் என்ற நீ
பாயில் சரிதல் முறை அன்று 2
தாயின் விடிவே என தென்று வா
தமிழீழம் தான் முடிவென்று 2
இது நாள் வரைக்கும் அழுதோம் அழுதோம்
இனி எம் தலைகள் நிமிரட்டும்
நிலம் மீதினிலே எழுவோம் எழுவோம்
பகைவர் உயிர்கள் கருகட்டும்

இனிவரும் இனிவரும் காலங்கள்

தமிழர் விழிகள் நெருப்பானால் எங்கள்
தலைவன் கைகள் பலமாகும் 2
தலைவன் கைகள் பலமானால்
எந்தத்தடையும் விரைவில் அழிவாகும் 2
இளமைக் காரர் முழுதும் முழுதும்
அனிமேல் புலியாய் இருக்கட்டும்
இருந்தால் ஈழம் மலரும் மலரும்
எமக்கும் சிறகுகள் முழைக்கட்டும்

இனிவரும் இனிவரும் காலங்கள்